
31ஆம் நாள் நினைவாக..!





அமரர் செல்வராசா கோணேஸ்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# கோணேஸ் தீபம்

30.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
இல -30/1, முத்துமாரி அம்மன்வீதி உதயநகர்மேற்கு, கிளிநொச்சியை
தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# செல்வராசா கோணேஸ்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

**கோணேஸ் தீபம்**

**30.07.2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந்த மண்ணுலகில்
எம் நல்வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்,
மகிழ்ச்சிக்கும் தன்னையே உருக்கி,
மகத்தான மானிடப் பிறவியாய்
வாழ்ந்து, எங்கள் குடும்பக்
கோவிலின் குலதெய்வமாய் எம்
மனங்களில் குடிகொண்டு
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் வழிகாட்டிய எங்கள்
குடும்பத் தலைவன்
**கோணேஸ்**
அவர்களின் நினைவுகளை எங்கள்
இதயத்தில் இருத்தி அவரின்
பாதங்களுக்கு இவ்
இனிய மலரினை
காணிக்கையாக்குகின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவாக...!



மண் மகிழ
13-03-1980

கண் நெகிழ
30-06-2015

அமரர்

# செல்வராசா கோணேஸ்

அவர்களின்

திதிநிர்ணய வெண்பா

ஆண்டோ மன்மதமாம் ஆன ஆனி பதினைந்து
பூண்ட பூர்வபட்ஷ சதுர்த்தி தனில் நீண்ட
புகழ் பூத்த செல்வசெல்வராசா கோணேஸ் சென்றடைந்தான்
மகள் பூத்த பாகன் செந்தாள் பணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரண் மழலைமுழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் மறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாலுக்கு பாலகன் வேண்டி
அமுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவிழீமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன்சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
வளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொருமூன்றுஞ்
திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ் சடையானாடு மனாந்த வெல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்பவெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்ய குறைவிலா உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# செல்வராசா கோணேஸ் அவர்களின் வாழ்க்கைத்தடம்....



ஈழவள திருநாட்டின் தென்னை, பனை, மாஞ்சோலைகள் நிறைந்த நல்ல நீர்வளமும் நிலவளமும் மிக்க யாழ் தென்மராட்சி எழுதுமட்டுவாழ் எனும் பூமிதனில் 1980.03.13 இல் உயர் சைவ வேளாளர் குலத்தில் சண்முகம் செல்வராசா சிவராஜேஸ்வரி தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தையாக பிறப்பெடுத்தார் செல்வராசா கோணேஸ்.

செல்லமாக கோணேஸ் என அழைக்கப்பட்ட இவர் மூத்த சகோதரியாக றமணா என்பவரும் இளைய சகோதரியாக குமுதினி என்பவருடன் கடைக்குட்டியான மேனகா என்ற சகோதரிகளையும் கொண்டவர். நால்வரும் நகமும் சதையும் போல் பாசம் நிறைந்த சகோதரர்களாக வாழ்ந்து வந்தார்கள். தனது சகோதரிகளுக்கும் தாய் தந்தையருக்கும் தான் ஒருவன் என்ற பெருமையும், பொறுப்பும் கொண்டவனாக கோணேஸ் வாழ்ந்து வந்தார்.

இவரது குழந்தைப்பருவம் மறக்க முடியாத மழலை நினைவுகளால் நிறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி:-

கே. கணேஸ் தனது ஆரம்பக்கல்வியினை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்தனில் ஆரம்பித்தார். 1986ம் ஆண்டு தொடக்கம் 1996ம் ஆண்டு வரை இடைவிடாது தனது கல்வியினை தொடர்ந்தார். அவ்வேளையில் கல்வியிலும், விளையாட்டுகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் இவர் மீது மிகுந்த அன்பு கொண்டவர்களாகக் காணப்பட்டனர். சிறு வயதில் மென்மையான பேச்சுடையவராகவும், அமைதியானவராகவும் காணப்பட்டார். விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற துறைகளில் திறமைமிக்கவர்.

ஒரு நாள் கடுமையான சுகயீனம் காரணமாக வீட்டில் ஓய்வெடுத்த வேளை இல்ல விளையாட்டுப் போட்டிக்காய் நண்பர்களால் அழைத்துச் சென்று உயரம் பாய்தல் போட்டியில் கலந்து கொண்டார். அந்தப் போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்டார். பாடசாலைச்சமூகத்தால் பாராட்டப்பட்டார். இள வயதில் நல்ல மெலிந்த தேகமுள்ளவராகக் காணப்பட்டார்.

## வீட்டுப்பொறுப்பு:-

கல்வியில் அக்கறை கொண்டதுடன் வீட்டிலும் தனது குடும்பத்தினருக்கும் ஒத்தாசை புரியும் இயல்பைக் கொண்டிருந்தார். சிறுவயதில் காலை வேளையில் தனது காணிக்குச் சென்று சுற்றிப்பார்த்து தேங்காய் பொறுக்குவதும் மாலை வேளைகளில் ஆடு கட்டி மேய்ப்பதும், கிளி வளர்ப்பதும், பொன்வண்டு பிடிப்பதும் இவரது பொழுது போக்காக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தனது சகோதரிகளின் பூப்புனித நீராட்டு விழாவினையும் பொறுப்போடு நன்றாக நடாத்தினார். சமூகத்தில் நற்பெயர் பெற்றார்.

1995ம் ஆண்டு தனது கடைசி சகோதரி மேனகா பிறந்த பொழுது மிகுந்த சந்தோசமடைந்தார். அவ்வாறாக 1996ம் ஆண்டு யாழ்ப்பாண பிரச்சினை காரணமாக திருமுறிகண்டிக்கு இடம்பெயர்ந்து தனது தந்தையாருடன் கடையில் வந்து நின்று வியாபாரத் தொழிலினை ஆரம்பித்தார்.

தந்தை தனது மகன் வளர்ந்துவிட்டான் என்று நினைத்து தனக்கு சுமை குறைந்துள்ளது என்றும் மகனையே கடையில் தனியாக வியாபாரம் செய்யும்படி விட்டுவிட்டு அவர் ஊருக்கு திரும்பி விட்டார்.

அவனது குடும்பத்தினர் அனைவரும் கோணேஸ் தனியாக முறுகண்டியில் நிற்கின்றான் என நினைத்து எல்லோரும் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தனர்.

இவ்வாறாக நாட்டில் சூழ்நிலைகள் மாறிக் கொண்டிருந்த பொழுதிலும் தனது தொழிலினை இடைவிடாது தொடர்ந்த வண்ணமே இருந்தார். தான் பொறுப்பு மிக்கவர் என்றும்,தனது குடும்பத்துக்கு தான் தான் துணை என்றும் மனதில் நினைத்துக்கொண்டார். எல்லோரிடமும் அன்பாகப் பழகும் குணம் கொண்டவர்.

முறுகண்டிப்பிள்ளையார் என்றுமே துணைநிற்பார் என்று முழுமையாக நம்பியிருந்தோம். இவ்வாறாக வாழ்ந்து வரும் வேளையில் சிறு சிறு நோய்கள் வந்தால் கூட இவரால் தாங்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சல் என்றால் அம்மா அருகில் வேணும் என்பார். இடப்பெயர்வுகள் இவரையும் குடும்பத்தினரையும் அலைய வைத்தது. கஷ்டம், துன்பங்கள் எதுவுமின்றி வாழ்ந்த குடும்பம் பல்வேறு நெருக்கடிகளை கடந்து இவ்வாறாக வன்னேரியில் இருந்த வேளை இவரது மூத்த சகோதரி திருமணத்திற்கென 2001ம் ஆண்டு நோர்வே சென்று விட்டார்.

இதன் பின் ஐவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். தனது இளைய சகோதரிகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார்.

2003ம் ஆண்டு இவர் தனது உழைப்பில் தாய், தந்தை குடும்பத்துக்கென உதயநகரில் சிறு காணி நிலம் வாங்கி, பெரியதொரு வீடு அமைத்து எந்தவித குறையுமின்றி ஒன்றாக மகிழ்வோடு வாழ்ந்து வந்தனர்.

என்றுமே தனது உழைப்பினை கைவிடாது பெரிதும் பாடுபட்டார். இரவு நேர தூக்கம் என்பது குறைவாகவே இருந்தது.

**வெளிநாட்டு வாழ்வு:-**

எல்லாம் நல்லாக இருந்த வேளை வெளிநாடு சென்று உழைக்கும் நாள் வந்தது. 2006ம் ஆண்டு தனது அத்தானின் உதவியுடன் நோர்வே சென்று அங்கு வெயில், குளிர் பாராது 4 வருடங்கள் ஓயாது உழைத்து பெரிதும் பாடுபட்டார். அங்கும் நிரந்தரமான விசா கிடைக்காமையினால் திரும்பவும் தனது நாட்டுக்கே திரும்பி வந்தார். சிறிது காலம் கூட ஓய்வெடுக்காமல் தனக்குரிய கடமைகளை செய்தவண்ணமே இருந்தார். அவ்வேளையில் தான் தனது உடம்பினைக் குறைத்து மெலிந்து சிறுவயதுடையவன் போல் காட்சியளித்தார். சைக்கிளையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாகனமாக கொண்டு வீதியில் யாரைக் கண்டாலும் கூப்பிட்டு என்னை தெரியுதா என்று கேட்குமளவிற்கு குழந்தை முகத்துடன் காணப்பட்டார்.

## திருமணம் :-

இவ்வாறாக தனது 30ஆவது வயதினில் தனக்கென்று விரும்பி தனது தாயின் மைத்துனியின் மகளான பேராலை பளையை சொந்தமுகவரியாகக் கொண்ட வாகீசன் சிவக்கொழுந்து தம்பதிகளின் 5ஆவது புதல்வி பிரிந்தாவினை 2010.10.21 தனது ஆசை துணைவியாக கரம் பிடித்து 2011 இல் அபிசயன் என்பவரை தனது மூத்த புதல்வனாக பெற்றெடுத்து இனிதே இல்லறம் நடத்தி வரும்வேளையில் 2014 இல் அடுத்த பெண் குழந்தையாக திலோசனா என்பவரையும் பெற்றெடுத்தார். தனது மனைவி, குழந்தைகளுக்கு என்றுமே சிறந்த துணைவனாகவும், தந்தையாகவும் இருந்து வந்தார். தனது அபியசன் குட்டியை வளர்த்து பெரியஆளாக்கி டாக்டர் ஆக்க வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தார். கேட்பவற்றை இல்லை என்றாமல் உடனேயே செய்துகொடுக்கும் ஆற்றல் மிக்க தந்தையாவார். தனது குழந்தைகள் மீது நிறைய ஆசைகள், கனவுகள் கொண்டிருந்தார். திலோசனா குட்டி அப்பா என்று அழைக்கும் வேளையில் அச்சொல்லினைக் கேட்க காலனவன்விட்டு வைக்கவில்லை.

## தொழில்:-

இவ்வாறாக இருக்கும் வேளையில் மீண்டும் தனக்கு சொந்தமாக ஒரு தொழில் வேண்டுமென்றே கிளிநொச்சி மத்தியகல்லூரி முன்பாக ஒரு கடை ஒன்றினை கட்டி அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தாமரை உணவகம் எனும் பெயர் சூட்டி தனது தந்தையின் உதவியுடன் தனது வியாபாரத்தினை தொடர்ந்து கொண்டிருந்தார்.

## இறுதிக்காலம் :-

13.06.2015 அன்றுதான் இவருக்கென்ற நேரம் வந்துவிட்டதோ விபத்து நடந்த நேரமிது.

13.06.2015 அன்று வீட்டில் இருந்து மனைவி, பிள்ளைகள், தாய் ஆகியோரிடம் கதைத்துவிட்டு பி.ப. 6 மணியளவில் புளியங்குளம் புதுவீடு ஒன்றுக்கு சென்று அங்கிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் போது தனது மனைவியின் T.P க்கு பதிலளித்து இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவேன் என்று கூறியுள்ளார். அதன் பின் திருமுறிகண்டி வந்து தனது குழந்தைகளுக்கு கச்சான், பழங்கள் வாங்கிவிட்டு எல்லோரிடமும் "போய்டு வாறேன்" என்று கூறிய சொல் காதிலிருந்து மறைவதற்குள் இவரது தூரம் நெருங்கிவிட்டதோ தெரியாது? அடுத்துவரும் இடமான அறிவியல் நகருக்கும் இரணைமடுவிற்கும் இடையிலான பகுதியில் தான் மோட்டார் சைக்கிள் விபத்து நடந்து படுகாயமடைந்தார்.


இவரது நேர்மைக்கும், துணிவுக்கும், பணிவுக்கும் இவ் விபத்து எல்லோரையும் கதிகலங்க வைத்தது. ஒன்றுமே அறிவில்லாத வேளையில் தான் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி கிளி வைத்தியசாலையில் அனுமதித்து உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு இதற்கிடையில் அவரது தாய், தந்தை, குடும்பத்தினர் அனைவரும் சென்று அவரது உடல் நிலையைப்பார்த்து திகைத்து ஓலமிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் அவரது உயிருக்கு ஆபத்தின்றி 10 நாட்கள் கொழும்பு வைத்தியசாலையிலும் இறுதி 8 நாட்கள் நவலோக மருத்துவமனையிலும் சிகிச்சையளித்து குணமடைந்து வருகிறார் என்ற மனத்துணிவுடன் எல்லோரும் காத்திருந்தோம். நினைவுகள் திரும்பி வந்த வேளையில் காலனவன் அழைத்துவிட்டான்.

30.06.2015 பி.ப 4.50 மணியளவில் இவரது செய்திகேட்டு ஊரே கதிகலங்கி விட்டது. சாவு என்ற செய்தி பொய்யாகாதா கோணேஸ் திரும்பி வரமாட்டானா என்று......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை - தாய் புலம்பல் ....

எம்மை கண் இமை காப்பது போல் காத்து வந்த எம் கண்மணியே, உன்னை35 வயதினிலே பிரிந்து தவியாய் தவிக்கின்றோம்.

கண்ணே!

பாலன் நீ பிறக்கையிலே பார்த்து மகிழ்ந்தோமடா, எமக்கொரு ஆண்குழந்தை பிறந்து விட்டானென்று ஆசையாகக் கோணேஸ் என்று நாமம் சூட்டினோமே, உன் நாமம் மறையாது செல்லமே எந்நாளும் அப்பாவிற்கு இறுதிவரை இருப்பாயென்று நம்பினேனப்பா, இறுதியில் நானே உனக்கு கொள்ளி வைத்தேனப்பா. உன் அம்மாக்கு உற்ற துணையாய் இருந்தாயே செல்லம். அம்மாவிடம் கதைகள் கேட்பதென்றால் உனக்கு தனிப்பிரியம். உன் சிரிப்பினை மறப்பேனா நான், "அப்பா, அம்மா என்று நீ அழைப்பதை எப்போ இனி கேட்கப்போறம்" எம்மை விட்டு பிரியமாட்டாய் என்று தானே நாம் நம்பியிருந்தோம். ஒரே மகன் என்று உரிமை கொண்டாடி உலகையே மறந்தோம்.

கடைசி நான்கு நாட்கள் வைத்தியசாலை தனிஅறையில் உன்னோடு நாம் கூடவிருந்து பார்க்கையிலே, கண்ணா நீ பட்ட அவதி எம் கண்முன்னே தெரிகிறது. பெத்தமனம் எப்படி ஆறுமையா....? விபத்தினால் நீ பட்ட துயரம் தாங்காது எம்மனம். இருப்பினும் உனக்கு நினைவுகள் திரும்பி நாம் இருவரும் கூறும் ஆறுதல் வார்த்தைகளை கண்ணால் பார்த்து, காதால் கேட்டு தலையசைப்பாயே! கோணேஸ் நாம் உன்னை குழந்தை போல் தட்டி தடவினோமே அப்போ, நீ என்னதான் நினைத்தாயோ. உன் அம்மா அப்பாவுடன் பேசுவதற்கு முடியவில்லையே என் செல்லக்குட்டி உன் மறைவுதனை.

மீண்டும் மறுமையிலே எம் குழந்தையாய் பிறந்து எம் மார்பிலே தவழவருவாயோ! அதுவரையும் ஆதரிப்பார் இல்லாஅநாதை போல் அழுது அழுது வாடும்...

என்றும் நினைவுடன்
அப்பா, அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு வருடமா.?
# நம் வாழ்வு....



மனம் கவர்ந்த நம் வாழ்வு மண்ணாகி போனதுவோ? ஆயிரம் ஆசைகளை மனதித்திற்கொண்டு, ஆயிரம் சிந்தனைகளை சொல்லிச் சொல்லி எத்தனையோ எதிர் பார்ப்புக்களை என் மனத்திலே விதைத்து வளர்த்து இடைவழியில் சென்று விட்டீர்களே! இம்மண்ணில் நீங்கள் தான் தெய்வம் என்று இருந்தேனே!

இரு குழந்தைகளையும் காணும் போது, என் உள்ளமோ நெருப்பில் இட்ட மெழுகு போல உருகுகின்றது. அபி என்றும் திலோசனா என்றும் நீங்கள் அழைக்கும் வார்த்தைகள் இனி இல்லையா? பிரிந்தா என்றும் அழைக்கும் அந்த அன்புக்குரல், இல்லை இல்லை அந்த உரிமைக்குரல் எனக்கும் இல்லையா? என்னோடு பகிர்ந்து கொண்ட இனிய மொழிகள் இனி எங்கே காணப் போகின்றேன்.

துன்பமென்றால் உடன் வந்து துணையாய் நிற்கும் நேசக்கரமே! "கணவன்" என்ற என் எதிர்பார்ப்பிற்கு இலக்கணமாய் திகழ்ந்தவர் அல்லவா நீங்கள். ஓடி ஓடி உழைத்து குடும்பத்திற்காய் பாடுபட்டவர் அல்லவா நீங்கள். எத்தனை கதைகள். அபிக்குட்டி டொக்டராக வருவான் என்ற உங்களின் ஆசை. ஐயோ நினைக்கவே உள்ளம் நடுங்குகின்றது. "தம்பி" என்று அபியை அழைக்கும் விதமே தனி விதம். தவிக்க விட்டீர்களே!

பிள்ளைகள் என்றால் உயிர் உங்களுக்கு. எனக்குத்தெரியும் எங்கு சென்றாலும் திலோசனா என்ன செய்கிறாள்? அபி என்ன செய்கிறான் என்ற தொலைபேசி அழைப்பு. இவைக்கு பதில் கூறுகையிலே நீங்கள் ஆசையோடு சிரிப்பீர்களே! இதை இனி எங்கு காண்பேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாள் பேசிய வார்த்தைகள் கல்லாய் கனக்கிறது. கச்சான்வேணுமெண்டு பிள்ளைகள் காத்திருக்க. அப்பா வருவார் வருவார் என்று விழித்திருக்க விபத்திலே அகப்பட்ட செய்தி என் காதில் கேட்டதுவே. என்னையறியாது திகைத்தேனே நான். ஓடோடி வந்து பார்க்கையிலே உங்கள் உடல் பட்டவேதனை நானறியேனே. என் அருமைத் தெய்வமே! நீங்கள் படுக்கையிலே பட்டதுயர் எவர் உணர்வார். பாவமறியா நீங்கள் பரிதவித்து போனீர்களே.

உங்கள் பிறப்பு 13, திலோசனாக் குட்டி 13, விபத்து 13, 45ஆம் நினைவு நாள் 13 என்ன இது. கடவுளை நம்பும் உங்களுக்கு இறைவன் கருணை காட்டவில்லையே. உயிர் வாழ்ந்து என்ன பலன் என்று கணங்கள் மனதிலே தோன்றி மறைகிறது. "பிரிந்தா" என்று இறுதியாக அழைத்ததெல்லாம்..... எனக்கு பிரிவு சொல்வதற்கா? பிள்ளைகளைப் பார்ப்பதற்கா? எனக்கு ஏதேனும் சொல்வதற்கா? அக்கணமே எம்குழந்தைகளை கூட்டி வருவேனென்றும், உங்கள் மனம் எம்மைக் கண்டால் ஆறுமென்றும் காத்திருக்கையிலே, உங்களை இழந்துவிட்டேன் என்றசெய்தி என் காதில் கேட்டதுவே. எம்மைக் காணாது உங்கள் உயிர் பிரிந்ததுவே. எம் குழந்தைகளுடன் கூடி உலாவிடா சென்று விட்டீர்களே. எம் செல்லங்கள் "அப்பா" என்று அழைத்திடவும் அன்பு முத்தம் கொடுத்திடவும் எம்முடன் சேராமல் மறைந்து விட்டீர்களே.

நிலையான உலகில் வாழ்வு நிலையற்றது என்று யார் சொன்னாலும் நாம் ஏற்கவே மாட்டோம். அப்பா நீங்கள் இல்லையென்பது சொல்லினால் இயம்ப முடியாத விடயம் இது. உங்கள் இறப்பை நம்பவே முடியவில்லை. ஆனால் நடந்து விட்டது. என் செய்து வாழ்வோம். இது எம் தலைவிதி.

தெய்வமாய் போற்றி உங்கள் காலடி பணிந்து கண்ணீரோடு வணங்குகின்றோம். எங்கள் அன்புத் தெய்வமே!.

**நம்**
**உன்னத்தின்**
**உள்ளே வாழும் ஓர்**
**உன்னதமான தெய்வம்**
*நம் அப்பா.!*

என்றும் நினைவுடன் வாழும்
மனைவி பிரிந்தா
பிள்ளைகள் - அபிசயன்
திலோசனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவின்



# புலம்பல்....

என் அருமை தம்பியே! எனக்கடுத்து வந்துதித்த ஆருயிரே, உனை என்னால் மறப்பதென்றால் எப்படி முடியும். நான் உன்மீது கொண்ட பாசமும் நீ என் மீது கொண்ட பாசமும் என்றென்றும் மாறாது. எம்மிருவருக்கும் ஒரு வயதுதானே வித்தியாசம். நாமிருவரும் கதைத்துப் பேசிய நாட்களை எண்ணி எண்ணி பார்க்கையில் என் உள்ளம் குமுறுகிறது. உன் காதுகளில் கேக்கவில்லையா கோணேஸ்? நான் இனியாரைத் தம்பி என்று கூப்பிடுவது. யாரையாவதும் தம்பி என்று கூப்பிட்டாலும் இனி உனக்கு நிகராகாது. போன வருடம் நான் நோர்வேயில் இருந்து வந்து திரும்பிப் போகும் போது யாரையும் படம் எடுக்கவும் இல்லை. அழவுமில்லை. ஆனால் உன்னை மட்டும் உனக்குத் தெரியாமல் படம் எடுத்தேன். உன்னைப் பார்த்து என் இதயத்தில் இருந்து உதிரம் சொட்டியது. கண்களில் இருந்து கண்ணீர் அலைகளாய் பாய்ந்தது. இதுதான் கடைசிப் பார்வையென்றும் என் இதயத்திற்கு தெரிந்தும் இருக்கிறது. என்னால் முடியவில்லையடா எப்போது உன்னைக் காண்பது கதைப்பது என்செல்லமே.

13.06.2015 அன்று உன் விபத்து செய்திகேட்டு ஒருநொடி என் இதயம் நின்று விட்டது. நான் இருக்கும் இடமோ வெகுதூரம். இருந்தாலும் நான்கு நாட்களில் உன் அத்தான் எங்களை அழைத்து வந்து விட்டார். இனி நான் எப்படியாவது காப்பாற்றுவேன் உனக்கு வாக்குத் தந்து நாங்களும் நவலோகவிற்கு சென்றோம். இனி என் தம்பி பிழைத்து விடுவான் என்று எண்ணினோம். அது அந்த ஆண்டவனுக்குப் பொறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லைப்போல் நான் நம்பும் இறைவனுக்கும் கைகூப்பி தொழுதும் பயன் ஏதுமில்லை. விதிதான்வென்று விட்டது. நாங்கள் தோற்றுப் போனோமெடா. என் பிள்ளைகளுக்குயார் இனி ஆசைமாமா. உன் குழந்தைகளுக்கு யார் இனி அப்பா. நாங்கள் ஓலமிடுவது கேட்கவில்லையா உனக்கு. எப்படி மனம் வந்தது எங்களை விட்டுச்செல்ல என் தம்பியே.

சிறு பிள்ளைகளாய் நாம் திரிந்த நாட்கள் என் மனதில் விரிந்து என்னைத் தடுக்கின்றது. அன்புச் சகோதரன் ஒருவன் இருக்கிறான் என்று எல்லோருக்கும் சொல்லி ஆனந்தப்படுவேன். குழந்தைகளுடன் நீ காட்டிய அன்பு அவர்களையும் கலங்க வைத்ததே. எல்லா இறைவனுக்கும் கைகூப்பி தொழுதும் பயன் ஏதும் இல்லையே.

என் அழகான குடும்பத்தின் அரசன் என்று என் மனத்தில் எண்ணுவேன். கோணேஸ் நீ இன்று இல்லை என்பது உண்மை ஆனால் உன் அக்கா உன்னையே தேடித்தேடி அலையுதடா. நீ எப்போ எனக்கு கிடைப்பாயடா.

என் செல்லமே! இறுதி நேரமதில் உன்னைப் பார்த்து பேசுவோமென்று நினைக்கையிலே உன் இடத்திலிருந்து "ஐயா சென்றுவிட்டார்" என்ற செய்தி கேட்டேன். தம்பி என் செல்லமே எம்மை விட்டு செல்வாயென்று ஒரு நொடிகூட நான் நினைக்கவில்லையேடா. கதறுகிறேன் உன் பிரிவால், உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றேன்.

**தம்பியே !!!**
**எத்தனை உறவுகள்**
**அகிலத்தில் இருந்தாலும்**
**காலத்தின் மோதலினால்**
**அவை மாறுபடும்**
**தம்பியே**
**உன் சுவாசம் மட்டும் போதும்**
**என்னை இந்நிலம்**
**மூடும் வரை**
**வாழ்த்தி வரும்.**

என்றும் உன் பிரிவால் வாடும்
அருமை அக்கா றமணா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச்சகோதரி குமுதினியின் புலம்பல் வரிகள்....

என் பாசம் நிறைந்த அண்ணாவே!

உன் திருமுகத்தை எப்போ காண்பேனோ..? சின்னஞ் சிறுவயதில் என்னோடு விளையாடியதையும் என்முன்னே கதைத்து திரிந்து உலாவியதையும் எப்படி மறப்பேனண்ணா. சிறுவயதில் என்னை கூட்டித்திரிந்து குட்டி சைக்கிளில் இருவரும் ஏறி சென்றதை என்னால் மறக்க முடியாதண்ணா. பாடசாலை சீருடையில் உன்னை பார்த்த ஞாபகங்கள் என்னை நினைக்கத் தூண்டுதண்ணா. அண்ணா! உனக்கொரு கவியா என்று எண்ணுகையில் என் இதயம் துடிக்கிறது. பால்முகம் மாறாது பாதியினில் சென்றாயோ அண்ணா.

நீ வளர்ந்து பெரியஆளாகி இருந்தாலும் எனக்கென்று ஒரு அண்ணா நீ தானே, உன்னை அழைக்கும் சொல்லை நான் எப்படி மறப்பேனண்ணா. நான் வளர்ந்து திருமணம் முடித்து இருந்தாலும், உன்னோடு நான் உரிமையோடு பேசுவேன் அண்ணா. இனி நான் எங்கு செல்வேன்.

அண்ணா உன் தங்கைக்கு ஒரு துன்பமென்றால் துடிதுடித்து போவாய். ஆனால் நீ இப்போ தனிமையிலே சென்று விட்டாய், உன்னைக்காண ஏங்குகிறது மனம். ஆனாலும் எப்படித்தான் காண்பேனண்ணா. அண்ணா! உன் கூட எத்தனை தடவை மோட்டார் சைக்கிளில் திரிந்திருப்பேன். இப்போ இதனாலோ வந்தது விதி. செல்ல செல்ல உன் நினைவுகள் கூடுதண்ணா. அனைத்தையும் எழுதுவதற்கு புத்தகமொன்று போதாதண்ணா. உனக்குள்ள ஆசைகளோ ஏராளம் அதற்குள்ளே மறைந்து விட்டாய் விண்ணோடு. அண்ணா! ஆசைக்கொருமுறை கூட உன்னை காணமுடியாதா என ஏங்குகிறது என் மனம். நான் பிரிந்து வெளிநாடு சென்று மூன்று வருடங்கள் தான் இருந்தாலும் உன் முகத்தைப்பார்த்து கதைத்துக் கொண்டிருப்பேனண்ணா. நீ என்னோடு இருமாதங்கள் முன்பு பேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி வார்த்தை "குமுதினி எப்படி சுகமாயிருக்கிறியா? சரி போய்டு வாறேன்" இந்த ஒலியை தான் நான் நினைத்துப் பார்க்க முடியுமண்ணா.


அண்ணா!

உன்னை 29.06.2015 அன்று நான் வைத்தியசாலையில் பார்த்து கதைகேட்ட போது உனது கண் திறந்து என் முகத்தைப் பார்த்து கதை கேட்டாயண்ணா. நான் கூறும் வார்த்தைக்கு உனது கண் கலங்கியது. அண்ணா நீ பாவம் என்று அழவைக்க மறுத்தேனண்ணா. இப்போது நினைக்கையிலே என் விழிகள் கலங்குகிறது. சென்று ஒரு நாள் ஆகையிலே உன் செய்தி கேட்டு ஓலமிட்டோமண்ணா. "மறக்காதண்ணா உன் இறுதி பார்வை என் மூச்சுவரையும்" அண்ணா நீயிருந்தால் எமக்கென்ன துன்பம். இப்போ வருந்துகிறோம். உனக்காக முடியவில்லையண்ணா.

உனக்காக துடிக்கும்
உன் இளைய சகோதரி
குமுதினி

**தங்களுக்கு தங்கை ஆகும்**
**பாக்கியம்**
**நினைத்து என் கண்கள் தான்**
**நனைகிறது**
**உங்கள் எழுத்துக்களே பெரிய**
**பரிசு**
**இந்த தங்கைக்கு!**

**கண்ணீர் வேண்டும் வேண்டும்**
**என்று**
**மீண்டும் மீண்டும்**
**என் கண்கள் சிந்த**
**வேண்டாம் என்கண்ணே என்று**
**துடைத்திடும் என் அண்ணனின்**
**கரங்கள் எனக்கு வேண்டும்...!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி தங்கை மேனகாவின் புலம்பல்....

ஆசண்ணா, ஆசயண்ணா, என்னை விட்டு ஏன் சென்றீர்கள். கண் இமைபோல்என்னை காத்து வந்த என் ஆசண்ணாவே, கண் இமைக்கும் நொடியில் எம்மை விட்டுசென்றீர்களே. நான் வளர்கையிலே என்னோடு கூடவிருந்து உங்கள் மூச்சுவரை என்னை நேசித்தீர்களே.

ஆசண்ணா! என்னுடைய 10வது பிறந்த நாளை நான் செய்யவேண்டும் என்று ஆசைப்பட உடனே எனக்கு விரும்பியபடி செய்தீர்கள். ஆசண்ணா. எனக்கு இனி யாருண்டு. ஆசண்ணா எம்மை விட்டு போவீர்கள் என்று நினைத்தீர்களா. எனக்கு ஆசண்ணா வேனும்.

ஆசண்ணா நீங்கள் கடையில் இருந்தால் ஓடிவருவேன். அண்ணா உங்களை நான் எப்போது இனிப்பார்ப்பேன் கடையில். என் படிப்பில் குறியாக இருந்தீர்கள் ஆசண்ணாவே. எனக்குப் பரீட்சை முடிவு வந்தவுடன் ஓடிவந்து எவ்வளவு ஆசையாக கேட்டீங்கள். உங்களுக்கு கம்பஸ் போக காணுமா என்று. ஆசண்ணா உங்கள் ஆசையை நிறைவேற்ற உங்களால் பார்க்க முடியேல்லயே. ஏன் ஆசண்ணா எங்களோடு சேர்ந்து வாழ முடியல்ல. ஆசண்ணா என்னைத்தானே அடிக்கடி வந்து கூப்பிடுவீங்கள் இறுதியில் மேனகா தண்ணி, அம்மா தண்ணி என்று அழைத்தீர்களாமே. என்னிடம் வைத்த பாசம் உங்களை நினைக்க வைத்ததே அண்ணா. என்னால் முடியவில்லையே ஓடி வர. ஆசண்ணா இறுதியில் உங்களால் முடியாமல் போய் விட்டதே. "மேனகா" என்ற ஒலி உங்கள் நாவால் இனி கேட்க முடியாதே அண்ணா.




உன் பிரிவால் வாடும்
தங்கை மேனகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தான் சிவகணேஸ் புலம்பல்....

என்னுயிர் மைத்துனன், என்னருமைத் தோழனே!
உத்தம உறவே!

உம்பிரிவை கேட்டு திகைத்தேனே நான். கோணேஸ்! நீங்கள் என்னோடு பழகிய சிறுவயதினை எப்படி நான் மறப்பேன். நாமிருவரும் எழுதுமட்டுவாழில் பழகிய நினைவுகள் என்னால் மறக்க முடியாது கோணேஸ்! நீங்கள் எனை அத்தான் என்று உரிமையோடு அழைத்தகுரல் இனி எப்போது கேட்பேனோ. கோணேஸ் நீங்கள் நோர்வே வந்து என்னோடு கூடி உலாவிய காலங்கள் என்னை நினைக்கத் தூண்டுகிறது. அடிக்கடி நான் உங்கள் உழைப்பினையே கதைப்பேன். கோணேஸ் கெட்டிக்காரனென்று. நீங்கள்விபத்தடைந்த செய்தி கேட்டு அந்தரித்துப்போய் ஓடிவந்தேன் உங்களைப் பார்க்க. என்னால் முடியும் வரைகாப்பாற்ற போராடினேன். விதி தான் சதியாகி விட்டதோ, இறைவனிடமும் ஒப்படைத்தேன். ஆனால் முடியவில்லையே. மீண்டும் என்மனைவி, பிள்ளைகளை இங்கு விட்டுவிட்டு நான் மட்டும் நோர்வே சென்றேன். அங்கிருந்து உங்களை காப்பாற்ற உதவி புரிவேனென்று. சென்ற நாட்கள் மறைகையிலே உங்கள் செய்தி என் காதில் கேட்டு கதிகலங்கி போனேன். ஓடிவந்தேன் உங்கள் உடலை பார்க்க. ஏன் தான் கோணேஸ் உம் உயிர் பிரிந்ததுவோ தாங்கமுடியவில்லை துயரமிது. உன் ஆத்மா சாந்தியாகட்டும்.

மைத்துனா நீ ஒருமகத்தான மானிடப் பிறவி. எம்மை நேசிக்கும் அருமைக்குணம். என் குழந்தைகளோடு ஆடிப்பாடி அரட்டை அடிக்கும் அந்த கடந்த காலங்கள் நிகழ்காலம் போல இருக்கிறது. கோணேஸ், கணேஸ் பெயரிலும் எத்தனைஒற்றுமை. நீ தான் பிரிந்து போனாயே! என்னைத் தவிக்க விட்டு.

*"கடல் கடந்து நான் திரவியத்தை தேட வந்தேன்*
*காலன் அவன்எம் திரவியத்தை களவு கொண்டான்*
*ஆயிரமாய் திரவியங்கள் கோடி பல தேடிடலாம்*
*ஆனாலும் மைத்துனனே உனக்கு அவை நிகராகுமோ?"*

என்றும் பிரியமுடன்
அத்தான் கணேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனன் அரவிந்தன் புலம்பல்....

கோணேஸ் எங்கு சென்றீரோ எம்மைவிட்டு. நான் உங்களை முதன்முதலில் புத்தளத்தில் தான்சந்தித்தேன். கண்டவுடன் என்னைக் கைகுலுக்கி வரவேற்றீரே. அப்போது பார்த்த முகம் கண் முன்னே நிற்கிறது. என்னால் தாங்கமுடியவில்லை. உங்களது இழப்பினை ஒரு நொடி கூட நோவினால் தாங்கமுடியாது நீங்கள் பட்ட வேதனை எம்மால் உணர முடியலையே. என்னோடு பழகியதையும் உங்கள் மென்மையான பேச்சினையும், புன்முகத்தினையும் நான் எப்படி மறப்பேனோ. விபத்து செய்திகேட்டு அடைந்த சோகம் ஆறு முன்பே இழப்பு செய்தி வந்துவிட்டதே. 35 வயதில் என்ன இறப்பிது என்று தான் மனம் கேட்கிறது. உறவை இழந்து தவிக்கும் உன் சகோதரியை எப்படித் தான் தேற்றுவது முடியவில்லை. கோணேஸ் எம்மை நீங்கள் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்றீர்கள். என் விதியோ என்னால் உங்கள் உடலை பார்க்க முடியவில்லை. உறங்குங்கள் ஆத்மா சாந்தியாகட்டும்.

*தூரத்தின் செய்தி என்னை துயரத்தில் ஆழ்த்திடவே*
*துன்பத்தில் துவழ்கின்றேன் நான்*
*மைத்துனனை இழந்துவிட்டு*
*யாருக்கு யார் ஆறுதல் சொல்ல - இங்கு*
*மாறாது எம் நினைவும் துயரமும் உனை*
*நினைத்து மறுபடியும் பார்ப்பதற்கு புதுப்பிறவி*
*ஒன்று எடுத்திடுவாய் எம் உறவினிலே*
*எம்முடனே உறவிட*
*காலங்கள் ஓடிவிடும் காற்றும் திசை*
*மாறிவிடும், என்றும் மாறாது உன்*
*புன்னகையும், நினைவும் உன் செயலும்*

என்றும் பாசமுடன்
மைத்துனன் அரவிந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக்கு கிடைத்த பிதாமகன்!

திருமணம் செய்த நாள் முதலாய் நம்பிள்ளையாய் கோணேஸ் உன்னையும் நினைத்தோம் "மருமகன்" என்றால் நமக்குச் சேர்ந்த மகன் தானே. பாசம் காட்டி பக்குவமாய் வாழ்ந்த உங்கள் வாழ்க்கைக்கு ஏன் தான் இந்தத் துன்பம் இல்லற வாழ்க்கையில் உங்கள் குடும்பப் பந்தத்தினை எண்ணி மகிழ்ந்தோம் நாங்கள். ஆசைக்கு பெற்ற அருமைப் புத்திரியின் அன்புக் கணவன் உன் குணங்களை ஊரெல்லாம் சொல்லி உரிமை கொண்டாடி மகிழ்ந்து வாழ்ந்தோம்.

விபத்து உன் உயிரை பறித்ததேனோ? வலியற்று உயிரோடு இருந்ததும் கண் முன்னே கண்டு வாழ்ந்திருப்போம். ஆனால் காணாமலே போனாய் ஐயா! வைத்தியசாலையில் நோவினால் இருந்த போது உடனிருந்து உயிர் பிழைப்பாய் என்று அத்தனை பாடுபட்டோம். கால்நடையும் பேருந்துப் பயணமும் இரவு பகல் பாராது கோணேஸ் உன் நினைவுடனே சுற்றித்திரிந்தோம். 18 நாட்கள் உன் படுக்கை பார்த்திருந்தது எம் கண்கள். ஒவ்வொரு நாளும் உனக்காய் விடியும் என்றும் இன்று நலம் வரும், இன்று நலம் வரும் என்றெல்லாம் கடவுளைக் கும்பிட்டோம். வருகின்ற தொலைபேசி அழைப்பிற்கு பதில் சொல்ல முடியாது பரிதவித்தோம். எல்லாம் வீணாகிப் போனதேனோ! அன்பு பேரன், பேர்த்தியை அரவணைத்து கொண்டாடும் எங்கள் அன்பு மகனே கோணேஸ், எதையும் ஆராய்ந்து செய்யும் உன் விவேகம். பாதையிலே பாழாகிப் போனதுவோ? ஐயா உன் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பணிந்து வேண்டுகின்றோம்.

**மனைவி பிருந்தாவின் அம்மா, அப்பா**
**(மாமி, மாமா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செல்லம்"
# எங்கள் செல்வம்

கோணேஸ்!
எங்கள் குடும்பத்தின் கோபுரமாய் நின்றாய்!
உழைத்து உழைத்து உயர்வதைக்கண்டு
உள்ளமெல்லாம் பூரித்தோம்
மாமாக்கள் என்ற உறவு காட்டி
எப்படியெல்லாம் வாழ்ந்தாய்
போலி அன்பே இல்லாத நல்மைகன் நீ

இறுதி வரையும் உடன் இருந்து
உயிர்பிழைப்பாய் என்றிருந்தோம்.
கோணேஸ்!
உறவுகள் எல்லாம் துடிக்குதடா?
உனை பெற்றவள் மனம் பதைக்குதடா?
ஆசையாய் பெற்ற பிள்ளைகளை பாராயோ?
அருமை மனைவியை எண்ணாயோ?
ஏதோ? எம் குடும்பச் சோலையில்
நிழல் தரு மரமாய் நின்றாய்
நொடியில் சாய்ந்தாய்
"செல்லம்" நாம் அழைப்போம் - இப்போ
வாயடங்கி தவிக்கின்றோம்
"செல்லம்" நீ உறங்கிவிட்டாய்
நிரந்தர உறக்கம் தான் - என்றாலும்
நீ தான் எங்கள் "செல்வம்"

தாய் மாமன் மார்
பியமாமா (சந்திரன்)
சின்ன மாமா (சிவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற தாயாய் பெருமை கொண்டோம்

நாம் உன்னை காணும் நாள் எல்லாம்
கண்ணா! எனகளிப்படைந்தோம்
உன்னை பெற்றதாய் என்றே
உளம் மகிழ்ந்தோம்
நம் பிள்ளைகளும் உனக்கும்
என்னையா பேதம் காண்போம்
நலமுடனே வாழ்ந்தால்
உறவினைத் தேடும் உள்ளமே! அதனால்
உன்னையும்தொலைத்தாயே!
கோணேஸ்!உன் முகம் என்றும்
எமைவிட்டு அகலாது நாம் உள்ளவரை



மாமிமார்

# இளமையில் இமை மூடினாயே!

எல்லோரிலும் அன்பு காட்டி
ஆசையாய் உரையாடும் அன்பு மகன் – கோணேஸ்
அயராத முயற்சிக்கும் அன்னையின்
அன்புக்கும் அடையாளம் – எங்கள் கோணேஸ்
குடும்பத்தினை உயர்வாய் மதித்து
அதற்காக உருகி உழைத்தவன் – எங்கள் தம்பி
கதை கேட்கும் சூரனாய்
கண்ணியம் உடையவனாய் எம்மோடு
வாழ்ந்தவனே! இளமையிலே இமை
மூடினாய் – எமக்கெல்லாம்
துணையாய் இருப்பாய் என்றிருக்க
யார் துணைதேடி சென்றாய்– தம்பி



பெரியப்பா, பெரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதி கலங்கிப் போனோம்!

மச்சான் தீபன்

தொலைதூரம் நாம் இருக்க
துயரச்செய்தி கேட்டோம் – கொடிய
தொலைபேசி செய்தி –கோணேஸ் உன் இழப்பு
கடல் கடந்து வந்து கதி கலங்கிப் போனேன்
தங்கையின் மனம் கவர்ந்து – ஏற்ற
கணவனாய் இலங்கக் கண்டோம்
இடர் ஏதும் உணராத
இனிய மைத்துனன் நீ
காலம் இருந்தால் சேர்ந்து வாழ்வோம் என்றிருந்தேன்
தங்கை தனிமையில் தவிக்க,
தனிமையாய் சென்றதேனோ? – உன்
பிள்ளைகள் நம் பிள்ளைகளும் தான்
கண்ணென காப்போம் – என்றாலும்
கலங்கியே நிற்போம்.

நம் உறவாக இணைந்த நாள்முதல்
நல்லவர் ஒருவரை கண்டோம் என்றிருந்தோம்
உறவின் பயணம் உன்னதம் என அறிந்தோம்
பாதி வழியில்பயணம் முடிந்ததுவோ...?
கடந்த காலமெல்லாம் நினைவில் வந்து வந்து போகிறதே
எங்கள் நிம்மதியை தொலைக்கிறதே
அப்பா என்று குழந்தை அழைக்கும் முன்னே
ஏன் இந்த அவசரப் பயணம்
மலர்ந்த திருமுகமாய் மண்ணில்வாழ்ந்தாய்
சோர்வே இல்லாமல் சுந்தரமாய் திகழ்ந்தாய்
தங்கை கணவன் என்றறிந்தா நாம் இருந்தோம்
இழந்த பின்பு தான்உன் அருமை இன்னும் புரிகிறது
அன்புச் சகோதரனே!
எமைத் தேற்றயாருண்டு
எமக்கொன்று என்றால் நீ இருந்திருப்பாய்
எமைத் தேற்ற யாருண்டு..?

மனைவி பிருந்தாவின் சகோதரர்கள்
மோகன், ஜெயம், வாசுகி, வாணி, தனுசுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதி கலங்கி நிற்கின்றேன்!



கண் இமைக்கும் நொடிப்பொழுதில்
காதினிலே ஓர் செய்தி
கோணேஸ் அத்தான்
வீதியிலே விபத்தாகி விழுந்து விட்டார்
ஓடிப்போய் பார்ப்பதற்கு நேரமது
இரவாகி நான் இருந்தது வெகு தூரம்
பார்க்க முடியவில்லை அக்கணப்பொழுதில் உங்களை
கவலையுடன் நான் இருந்தேன்
நன்றாக குணமாகி வீடு வருவீர்கள்
நான் பார்த்து ஆறுதலாய் பேசலாம்
என்று நினைத்திருந்தேன்
நிகழ்கால வாழ்வுதனில் நான் நினைக்கவில்லை
நீங்கள் இப்படி வீடு திரும்புவீர்கள் என்று
நினைப்பெல்லாம் கனவாகி போனது போல
திடீரென்று ஓர்செய்தி
நீங்கள் எங்கள் எல்லோரையும்
விட்டு நிரந்தரமாக சென்றுவிட்டீர்கள் என்று
எங்கள் குடும்பமும் அனைவருமே
கதறினார்கள் உங்களுக்கா இப்படி ஒரு அவல நிலை என்று
என்ன செய்வேன் இனி நான்
உங்களை போல் அத்தானை
இனி எங்கு காண்பேன் நான்.

மனம் அது ஆறவில்லை ஆனாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய அனைவரும் வேண்டுகின்றோம்.

**மைத்துனி**
**தனுசுகி புலம்பல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் நிரோஜ் புலம்பல்...

என் அருமை ஆசை மாமாவே
என்னை விட்டு எங்கே சென்றீர்
இனி எப்போது உங்களைக்கண்டு
ஆசை முத்தமிட்டு செல்லச்சண்டை இடுவது

நோர்வேயில் இருந்த போது
பாடசாலையில் இருந்து என்னை
கூட்டி வரும் போது என்னை
தோளில் தூக்கியபடியே வருவீர்களே
இப்போது அதை நினைக்கும்
பாக்கியத்தை மட்டும் தானே
தந்துவிட்டு எங்கு சென்றீர்கள்
ஆசைமாமா கதறி கதறி அழுகின்றேனே
கேட்க வில்லையா எங்கு சென்றீர் ஆசைமாமா

மறுமுறை ஒருமுறையாவது வரமாட்டீரா
என்று அங்குமிங்கும் தேடிப்பார்க்கின்றேன்
வரமாட்டீர்களா ஆசை மாமா

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் சாருஜி புலம்பல்...

ஆசைமாமா, ஆசைமாமா என்று
ஆசையோடு அழைக்கின்றேன்
எங்கு சென்றீர் நான் பிறந்தபோது ஆசையோடு
ஓடிவந்து முதலாவதாக முத்தம் தந்ததும்
நீங்கள் தானே ஆசை மாமா
இப்போது என் இதயம் அழுகின்றது
உங்களுக்கு கேட்கவில்லையா
உங்கள் செய்தி கேட்டு துடிதுடித்து
ஓடிவந்தேன் - ஆனால்
உங்களோடு கதைக்க கூட முடியவில்லையே
போன வருடம் வந்த போது உங்கள்
கடையிருந்து விதம் விதமான
சாப்பாடுகள், சொக்லேற், சோடா
என்று கொண்டு வந்தீர்களே ஆசை மாமா
இனி இவற்றை ஆசையோடு வாங்கி தருவதற்கு
ஆசை மாமா இல்லையே
இனி நான் யாரை ஆசைமாமா என்று அழைப்பது...?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நான் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் உன்
# நினைவுகள்...

கண்கள் இமைக்கும் கணப்பொழுதில்
உன் நினைவுகள் என்றும் எம்முடன் இருக்கும்
ஆனால் எம் கண்களில் எல்லாம் இருக்கும் சோகங்கள்
எங்களை ஆழ்கடலில் ஆழ்த்திவிடுவது போல்
எம் கண்கள் சொல்கின்றது
உன் கடைசி நேர கணப்பொழுதில் சிதறிபோனதோ
உன் சிறு கண்ணீர்த்துளிகள்
கடைசிவரை அடக்கிய மூச்சினைத் தந்து சென்று விடவே
சொந்தங்களில் எல்லாம் கண்ணீர் நதிகளாய் ஓடுகின்றதே!
தூரத்தில் இருக்கும் சொந்தங்கள் எல்லாம்
துயரத்தால் ஆழ்ந்து போனதே!
காலங்கள் எல்லாம் மாறிவிட்டது
கனவுகள் எல்லாம் ஆழ்ந்துவிட்டது.
மறுபடியும் பிறந்திடுவாய் மறுபிறவியாய்
எம் சொந்தங்களுடன்..........
என்றும் உன் நினைவுகள் எம்முடன் இருக்கும்!

**மறவாத உறவுகள்**

"தொடக்கம் ஒன்று இருந்துவிட்டால்
முடிவும் ஒன்று இருப்பதுண்டு"
இடைவழியில் முடிந்து விட்டால் மிகுதி வழி
என்னவாகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு இனி கதைபேச...?

நெஞ்சு நிறைந்த கனவோடு
உழைப்பின் வெற்றி நிறைந்த விழிகளோடு
புன்னகை நிறைந்த முகத்தோடு
இனியொருவனை எப்போது காண்பேன்...?

பிரிவுகளின் மேல் பிரிவுகள்
இழப்பின் மேல்இழப்புக்கள்
கண்ணீரின் மேல் கண்ணீர்
துயரத்தின் மேல் துயரம்
உன்னையும் இழந்து தவிக்கும் நகரில்
இப்போது என்ன இருக்கிறது?

நண்பனே உன்னை
என்னிடமிருந்து பிரித்த
இரக்கமற்ற காலனை என்ன செய்ய?
இடை வழியில் பறித்துச் சென்ற
உனதுயிரைதிருப்பித் தரமாட்டானா..?

மாலை நேரம் அன்பு கலந்து கதைப்பது முதல்
பசியையும் பொருட்படுத்தாமல்
மோட்டார்வண்டியில்
உழைப்பதற்காய் ஓடியது முதல்
அனைத்தும் அகலா நினைவுகளாய் நெஞ்சில்
விழிகளில் முட்டுகிறது கண்ணீர்

இன்றும் பேசி முடிக்கப்படாத
கதைகள் எண்ணற்றவை
வெறிச் சோடியிருக்கும் இந்த நகரில்
இனி நான் யாரோடு கதை பேச?
அன்பு கலந்த ஒரு தேநீரை யார் நீட்டுவார்...?

நண்பன்
லோகேஸ் (ஆசிரியர்)

உழைப்புக்கு ஒரு நாள் போதும்
உல்லாசத்துக்கு ஒரு மணி நேரம் போதும்,
ஆனால் நட்புக்கோ ஒரு ஆயுள் போதாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் துவர்சிகா புலம்பல்...

என் செல்ல ஆசைமாமா
எனக்கொரு ஆசைமாமா
தட்டிதடவ ஒரு ஆசைமாமா
தாவிக் குதித்து விளையாடுவேனே உங்களோடு

ஆசையாக " துவர்சிகா" என்றுவெருட்டுவீங்களே
பயமறிய மாட்டேனே நான்
அருகிருந்தால் இறுக கட்டி அணைப்பீர்களே
எனக்கென்றுஏதும் கேட்டால் உடனே
வாங்கித் தருவீங்களே!
ஆசைமாமா உங்களை இறுதிக்கு முதல் நாள்
பார்க்கையிலே
உங்கள் கண்ணால் என்னைப் பார்த்தீர்கள்
என் அம்மா துவர்சி வளர்ந்து விட்டாளா என கேட்கும்
போது ஓம் என்று தலையசைத்தீர்களே,
என்னோடு கதைக்கவில்லையே ஆசைமாமா.

# அம்மம்மாவின் புலம்பல்...

**சந்ததியின், சரித்திரன்
மகளின் மகனாய் அவதரித்தானே
பேரன் எனக் கொண்டாடினேன்
என் முதுமையில் இளமையாய் - என்றும்
இருந்தாய் தம்பி - நம்
சந்ததியில் வந்துதித்த ஆண்மகனே! அழகுத்தம்பி
என் குணம் அறிந்து, வெற்றிலை, பாக்கோடு
வீடு வருவாய்
நாமெல்லாம் வாழ்ந்து விட்டோம் - நீ
இன்னும் வாழாமல் சென்றாயே!
அடிக்கடி - வீதிக்கதவை பார்க்கின்றேன்
நீ வருவாய் என்று - வெற்றிலை, பாக்கோடு
இந்த முதுமை உள்ளம் என்னதான் செய்யுமையா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் தந்தை வழி மைத்துனன் மைத்துனிமார்கள் புலம்பல்...

எம் உறவில் வந்துதித்த
எம் அருமைத் தோழனே
உம் உயிர் பிரிந்த வேளையை
யார் தான் மறப்பாரோ
35 வயதினை நினைக்கையிலே
எம் உள்ளமெலாம் நோகிறது
பத்து மாதம் சுமந்து பாரினிலே நீ
உதிக்கும் போது பார்த்து மனம் குளிர்ந்ததுவே
எம்மோடு உறவாட எமக்கொரு
உறவாய் இருந்தீயே மச்சான்
நாம் என்ன பாவம் செய்தோம் உன்
உடலை சாம்பலாக்க
சுற்றி சுற்றி ஓடிவருவாய்
சுதந்திரமாய் உலாவிடுவாய்
சொந்தமெல்லாம் சூழ்ந்திருக்க
எம் இரத்தத்தில் கலந்த மைத்துனா
கலங்குகிறோம் உனை எண்ணி
காலமெலாம் உன் நினைவுடன்
வாழும் அன்பு உறவுகள் நாங்கள்
ஆத்மா சாந்தியாகட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறவா சகோதரிகளின் உயிர்மூச்சு...

மென்மையான தேகமும் சிவந்த கன்னமும்
வஞ்சமில்லா புன்முகமும் கொண்ட
எம்மோடு உறவாடும் எங்கள் சகோதரனே
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் அன்புக்கு நிகராகுமா?
எம்மிலும் ஒருவன் நீங்கள் தானே
எம் குழந்தைகளுக்கும் தாய்மாமன்
ஒருவர் தானே
செல்வச்சிரிப்போடு எம்மோடு பேசி
உறவாடும் அண்ணாவே கோணேஸ்,
எமக்கொரு துணையாய் இருந்தீயேசெல்வம்,
உன்னோடு பேசினால் எம் துன்பம்நீங்கிடுமே
ஆறுமா எம் மனம் ஆறாதையா எந்நாளும்
சொந்தம் சொல்லி ஓடிவர சொல்லாமல்
சென்று விட்டீர்களே,



பாவமறியா உனக்கு படைத்தவன் பறித்துவிட்டான்
அந்தரித்து போய் விட்டாயே, அடுத்தவர் சொல்லியழ
அநாதையானோம் அப்பன் நீ இல்லையென்று
அறிவாயோ எம்சோகத்தை யார்
காண்பார் உன் உணர்வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கௌரிகாப்பு



## *விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிடாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஸ்டகம்

பிரம்ம முராரிஜ ஷ்ராா்சித லிங்கம்
நிர்மல பாஷ்த சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ முனிப்பிரவார்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வதஷ்கந்தி ஸலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸராஸர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி ஸ்தாசிவ லிங்கம்



கனகமகாமணி பூஜித லிங்கம்
பணபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ யக்ஞ விநாசன லிங்கம்
தத் பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கய ஹார ஸசோபித லிங்கம்
ஸஞ்சித பாவ விநாச லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவன பக்தி ப்ரபாகர லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்திர விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸரகுரு ஸர்வர பூயித லிங்கம்
ஸரவண புஸ்ப ஸதாசிவ லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் காரிய சித்திமாலை

பந்தம் அகற்றும் அநந்த குணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள் அனைத்தும் எவன் பால் தக வருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றாம்.

01

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள் எவன் அவ்
உலகிற் பிறங்கும் விவகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப் பயனை ஊட்டுங்களை கண் எவன் அந்த
உலக முதலைக்கணட:தியை உவந்து சரணம் அடைகின்றோம்.

02

இடர்கள் முழுதும் எவன் அருளால் எரி வீழும் பஞ்சு என மாயும்
தொடரும் உயிர்கள் எவன் அருளால் சுரர் வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறு இன்றிக் கருமம் எவனால் முடிவு உறும் அத்
தடவு மருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றாம்.

03

மூர்த்தி ஆகித் தலம் ஆகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான்எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்துசரணம் அடைகின்றோம்

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின்முதல் யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய் இல் இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.

05

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்கு பர
நாத முடிவில் வீற்று இருக்கும் நாதன் எவன் எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

06

மண்ணில் ஓர் ஐங்குணம் ஆகி வதிவான் எவன் நீர் இடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்

07

பாச அறிவில் பசு அறிவில் பற்றற்கு அரியபரன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப் பணிக்கும்அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம்அடைகின்றோம்

08

# வைரவர் துதி பாடல்

ரக்த ஜ்வால ஜடாதரம் ஸுவிமலம் ரக்தாங்க தேஜோமயம்
திருத்வா சூல கபால் பபச டமருந் லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வாணம் ஸுனவாஹனம் த்ரிந்யனம் ஆனந்த கோலாஹலம்
வந்தே ஸர்வ பூத பிசாச நாத வடுகம் க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்
கலைகளை உணர்விக்கும் அம்மை
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கைக் கீரையின் பயன்கள்

→ மனித உடலுக்கு ஆரோக்கியத்தையும், தேவையான புரதச் சத்துக்களையும் அளிப்பதில் காய்கறிகளும், பச்சைக்கீரைகளும் முக்கிய பங்காற்றுகின்றன.

→ கீரையைப் பச்சைப் பசேல் என்று அதன் நிறத்திலேயே சமைப்பது தான் மிகவும் சிறந்தது.

→ இதில் விற்றமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீசியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

→ மேலும் அனைத்து தாதுக்களும் சம அளவில் கிடைக்கும். முருங்கைக்கீரையை அவ்வப்போது உணவில் சேர்த்துக் கொள்வதால், நோய் எதிர்ப்பு சக்தியும், உடல் வலிமையும், உறுதியும் கிடைக்கிறது.

→ முருங்கைக் கீரையை, வேர்க்கடலையுடன் சேர்த்துச் சாப்பிட கர்ப்பப்பை வலுவடையும்.

→ முருங்கைக்கீரை உண்பதால், தாதுபலம் பெருகுவதுடன், இரத்த அழுத்தமும் குணமாகும்.

→ கொழுப்புச்சத்து குறைவடைவதுடன், நீரிழிவு நோயும் குணமாகிறது.

→ முருங்கைகீரை சாப்பிடுவதால் காமாலை குறையும். கண்பார்வை தெளிவாகும். ஆனால், மூட்டு வலி உள்ளவர்கள் முருங்கைக்கீரையை சேர்த்துக்கொள்ளக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→ கூடிய வரை கீரை வகைகளைச் சாப்பிடுங்கள். உடல் ஆரோக்கியமாக இருங்கள்.

→ முருங்கையில் தவசு முருங்கை, கொடி முருங்கை, நன் முருங்கை, காட்டு முருங்கை, கொடிக்கால் முருங்கை என்று பல வகைகள் இருக்கின்றன. இவற்றில் வீடுகளில் மரமாக இருக்கும் முருங்கையை நன்முருங்கை என்று நம் முன்னோர்கள் அழைத்து வந்துள்ளனர்.

→ முருங்கை மரத்தின் இலை, பூ, காய் ஆகியவை சிறந்த உணவாகப் பயன்படுகின்றன. இவை சிறந்த பத்திய உணவாகவும் கருதப்படுகின்றன. அத்தோடு முருங்கை மரத்தின் அடி முதல் முடி வரை அனைத்துப்பகுதிகளும் சிறந்த மருந்தாகவும் பயன்படுகின்றன.

→ முற்றிய விதைகளை நட்டோ அல்லது முற்றிய கிளைகளை வெட்டி நட்டோ முருங்கை மரத்தை இனவிருத்தி செய்யலாம். முருங்கை மரம் சுமார் 9 மீற்றர் வரை வளரும்.

→ காற்றடித்தால் எளிதில் ஒடிந்து விடும். முருங்கை மரம் வளர அதிக தண்ணீர் தேவையில்லை.

→ முருங்கை இலையில் விற்றமின் "ஏ", விற்றமின் "சி", இரும்பு சத்துக்கள் அதிக அளவில் இருக்கின்றன.

→ முருங்கைக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விற்றமின் "ஏ" பற்றாக்குறை தொடர்பான கண்நோய்கள் நீங்கும். கண்கள் குளிர்ச்சியடையும். பார்வை தெளிவடையும். பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகை, காமாலை போன்ற நோய்கள் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவோம் உயர்வோம்..!

→ பிறர் தவறு செய்தால் ஏன் இப்படி செய்தார் என்று சிந்தித்து நேரத்தை வீணடிக்கக் கூடாது.

→ சோர்வடைந்து காணப்படும் எவரையும் பார்த்து ஏன் உடல் நலம் சரியில்லையா? என்ன ஆயிற்று என்றெல்லாம் கேட்கக் கூடாது.

→ பிறர் உங்களுக்குச் செய்யும் உதவிகளை மனதில் வைத்து நன்றி பாராட்டுங்கள்.

→ எந்த ஒன்றையும் உபயோகப்படுத்தி விட்டு செல்லும் போது முன்பு இருந்ததைப் போல் அப்படியே வைத்து விட்டு செல்ல வேண்டும்.

→ பிறரை எக்காரணம் கொண்டும் விமர்சிக்கக் கூடாது.

→ எவரையும் பழித்துப் பேசக் கூடாது.

→ வாழ்க்கையின் ஒவ்வொரு சூழலையும் ஒரு கலை வடிவத்தின் அங்கமாகப் பாருங்கள்.

→ உங்களுக்குத் தேவையான முடிவுகளை நீங்களேஎடுக்க முயற்சிக்க வேண்டும். பிறருடைய ஆலோசனையைக் கேட்டாலும் இறுதி முடிவு உங்களுடையதாக இருக்க வேண்டும்.

→ பிறருடைய நற்பண்புகளைப் பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.

→ வாழ்க்கையில் உயர உயர பணிவைக் கையாளுங்கள்.

→ எந்தவொரு பிரச்சினையையும் சற்றே விலகி இருந்து பாருங்கள்.

→ பிரச்சினைகளை கண்டு ஓடாமல் நீங்கள் உங்கள் மீது நம்பிக்கையும் அன்பையும் வைக்க கற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதம் என்றால் என்ன.....?

ஒவ்வொரு மாதமும் நம் இந்து சமயத்தில் ஏதாவது ஒரு விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. விரதம் என்றால் நாம் நம் கடமைகளைக் குறைத்துக் கொண்டு, இன்றைக்கு இதைச் சாப்பிட மாட்டேன் - அதைச் சாப்பிட மாட்டேன் என்று கூறி மற்றவர்களை கஷ்டப்படுத்திக் கொண்டு நமது ஆத்ம பலத்தை வீணாக்கிக்கொண்டு அவஸ்தைப்படுவது விரதம் இல்லை.

இந்திரியங்களை அடக்குவதே விரதத்தின்சிறப்பு. சோம்பேறியாக இருப்பவன் சதா படுத்துக்கொண்டே இருந்துவிட்டு நான் விரதம் இருக்கிறேன்என்று சொல்வதும் விரதம் இல்லை.

சிலர் முன்கோபிகளாக இருப்பார்கள். விரதம் இருக்கும் காலங்களில் "இங்கே ஒருத்தன் விரதம் இருக்கிறேன். கவனித்துப் பால் பழம் கொடுக்க யாருமில்லை" என்று கத்துவார்கள்.

கோபப்படுவதால் நம் ரத்தம்கொதிப்படைகிறது. அதை அடக்கவே நாம் விரதம் இருக்கிறோம். கோபப்பட்டு கத்திவிட்டு பால், பழம் அருந்துவது விரதம் இல்லை. அளவில்லாமல் எப்பொழுது வேண்டுமானாலும் உண்ணலாம் என்று உண்ணுபவர்களின் நலங்களைக் கருதியே உபவாசங்களும், விரதங்களும் ஏற்படுத்தப்பட்டன.

நாம் உண்ணும் உணவு நம் உடலுக்குச் சக்தியைக் கொடுக்கிறது. மனத்தையும் பண்படுத்தும் வகையில் உண்ண வேண்டும் என்றே நம் சாஸ்திரங்களும், மருத்துவமும் விஞ்ஞான சான்றுகளும் எடுத்துரைக்கின்றன. நம்மடைய குண விடயங்களை ரஜஸ், ஸத்வம், தமஸ் என்று மூன்று விதமாக பிரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டிருக்கிறது. அதிகமான கோபத்தை உண்டு பண்ணும் குணம் ரஜோ குணம், சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்கும் குணம் தமோகுணம். இவை இரண்டையும் ஊக்குவிக்கும் ஆகாரங்களையும் நாம் ஒதுக்க வேண்டும்.

விரதம் என்று சொல்லப்படும் காலங்களில் சில உணவு வகைகளை நாம் ஒதுக்கிவிட வேண்டும். கொழுப்புச் சத்துக்கள் நிறைந்த மாமிசம், வெங்காயம், பூண்டு, மசாலா காரம் நிறைந்துள்ள உணவு வகைகளை நாம் விலக்கிவிட வேண்டும். இவை ரஜோ குணத்தைத் தூண்டி விடும். புளித்துப் போன நாட்பட்ட உணவு வகைகள் தமோ குணத்தையும் தூண்டுகின்றன.

மூன்றாவதாகச் சொல்லப்படுவது சாத்வீக உணவு வகைகள் ஆகும். சாத்வீக உணவுவகைகளுக்குமாமிச கப்பே ஆகாது. இந்த உணவு வகைகளை உட்கொள்பவர்களுக்கு எந்தெந்த குணங்கள் இருக்கும்?

ரஜோ, தமோ குணத்தையும் தூண்டாத உணவுகள் சாத்வீக உணவுகள் தான். வேகத்திற்கு பதிலாக விவேகத்தையும், கோப குணத்திற்கு பதிலாக சிந்தனையும் சோம்பலுக்குப் பதிலாக சுறுசுறுப்பான செயலாற்றும் திறனையும் கொடுக்கும் என்பது நிச்சயம்.

## சிந்தனைக்கு சில..!

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரு தவறை திரும்ப திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக்கொள்கிறவனே மனிதன்.

காலை நேரம் எப்படி தோன்றுகிறதோ மாலை நேரமும் அப்படியே தோன்றுகிறது. விடியும் பொழுதிற்கும் முடியும் பொழுதிற்கும் தோற்றத்தில் வேறுபாடில்லை. இன்ப துன்பங்களையும் அப்படியே நினைத்து விடு. எந்தக் கட்டத்திலும் நீ அழ வேண்டிய அவசியமிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா..?
# "மென்மையே வாழும்"

- பல் வலிமையானது. வயது முதிர விழுந்துவிடும். ஆனால் மென்மையான நாக்கு நீண்ட நாள் இருக்கும்.

- நெருப்பு வன்மையானது. ஆனால் மென்மையான நீர் நெருப்பை அணைத்து விடுகிறது.

- புயலினால் வலிமையான மரம் விழுந்து விடுகின்றது. மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.

- பூகம்பத்தினால் வலிமையான வீடுகள் உடைந்து போகின்றன. மென்மையான சிலந்தியின்வீடு தப்பித்து விடுகிறது.

- வன்மையான கல்லையும் மென்மையான மரத்தின் வேர் பிளக்கிறது.

- வெப்பம்வன்மையானது. ஒளி மென்மையானது. ஆனால் வெப்பம் பாயாததூரத்திற்கு ஒளி பாய்ந்து விடுகிறது.

- வன்மையான பொருள் நுழையக் கடினமான உடலில் "எக்ஸ்" கதிர்கள் நுழைந்து விடும்.

- ஆங்கிலேயரின் வன்மையான படைகளை காந்தியின் மென்மையான அகிம்சை தான் வென்றது.

- போர்க்களத்தில் வெற்றியைக் குவித்த வீரன் மென்மையான பெண்ணின் காதல் பார்வையினால் விழுந்து விடுகின்றான்.

அன்பானவர்களே!

வன்மைக்கு வரலாற்றில் இடம் இல்லை
மென்மையோடு வாழுங்கள்
இனிமையாக பேசுங்கள்
மென்மை தானே வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரமும் மனிதனும்...

♣ மண் மனிதனுக்கு புதைகுழி. மரத்துக்கோ கருவறை.

♣ மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்கு போகிறான்.

♣ மரம் கொடுப்பதற்காக கைகளை நீட்டுகின்றது. மனிதன் வாங்குவதற்காக கைகளை நீட்டுகின்றான்.

♣ மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கும் மனிதன் வலக் கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக் கொள்கிறான்.

♣ மரம் வானத்தை நோக்கி வளர்கிறது. மனிதன் புழுதியிலேயே புரளுகிறான்.

♣ தொட்டிலாகி, நடைவண்டியாகி, ஏடுகளாகி, கட்டிலாகி, ஊன்றுகோலாகி, படையாகி வாழ்வெல்லாம் மரத்தின் பயன்பாடு மனிதனே.

♣ மரத்தை அழிக்காதே மரமாகத்தான் உன்னால் முடியவில்லை மரத்தை படைக்கவும் முடியாதா?

வெற்றி வந்தால் பணிவு
அவசியம் -
தோல்வி வந்தால் பொறுமை
அவசியம் -
எதிர்ப்பு வந்தால் துணிவு
அவசியம் -
எது வந்தாலும் நம்பிக்கை
அவசியம் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை இளமையாக வைத்திருக்க சில ஆலோசனைகள்
# How to live young

மனதை எப்போதும் உற்சாகமாக வைத்துக் கொண்டால் நாம் எப்போதுமே இளமையாக இருக்கலாம். அதெப்படி பிரச்சினைகள் வரும் போது மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ள முடியும் என்று நீங்கள் கேட்கலாம். முடியும் எதையும் நேர்மறையாக சிந்திக்க ஆரம்பித்து விட்டால் நம்மால் எந்தச் சூழ்நிலையிலும் உடைந்து போகாமல் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

ஒரு நகைச்சுவை இருக்கிறது. அதாவது நீங்கள் வாழ்க்கையில் ஏன் கவலைப்பட வேண்டும். எல்லாவற்றிற்குமே இரண்டு வாய்ப்புகள் தான் உள்ளன.

வாழ்க்கையில் ஒன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள் அல்லது நோய்வாய்ப்படுவீர்கள். முதலில் நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? இல்லை, உடல் நலக்குறைவு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கும் இரண்டு வாய்ப்புகள் தான். ஒன்று நீங்கள் குணமடைவீர்கள். இல்லையென்றால் இறந்துவிடுவீர்கள் நீங்கள் குணமடைவீர்கள் என்றால் ஏன் அதைப்பற்றி கவலைப்பட வேண்டும். இல்லை இறந்து விட்டால் ஒன்று நீங்கள் சொர்க்கத்திற்கு செல்வீர்கள் இல்லை நரகத்திற்கு செல்வீர்கள். சொர்க்கத்திற்குச் சென்றால் அதைப்பற்றி கவலைப்பட வேண்டுமா என்ன? இல்லை நரகத்திற்குச் செல்வீர்கள் என்றால்.... அங்குதான் உங்களது ஏராளமான நண்பர்கள் இருப்பார்களே... அவர்களுடன் அரட்டை அடித்தே காலத்தை கழிக்காமலே பிறகு ஏன் கவலைப்பட வேண்டும்.. இதுதான் அந்த நகைச்சுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இது நகைச்சுவை மட்டுமல்ல... வாழ்க்கையின் சுவையை அறியும் வழியும் கூட....

எதிலும் ஒன்று நல்லது கெட்டது நடக்கும். நல்லது நடந்தால் கவலைப்பட ஒன்றுமில்லை, கெட்டது நடந்தால் அதிலும் இரண்டு விஷயங்கள். இப்படி இருக்க, உங்கள் வாழ்க்கையைப் பற்றிய கவலையைத் தூக்கி எறிந்து விட்டு, வாழ்க்கை என்பது பூங்காவனம் அல்ல போராட்டக்களம் என்பதை உணருங்கள்.

போராட்டக்களத்தில் இழப்புகளும், வெற்றிகளும் சாதாரணம். எதற்கும் கலங்காமல் வாழப் பழகிக் கொள்ளுங்கள். எப்போதும் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று அதன் போக்கில் உங்களது வாழ்க்கையை சிறப்பாக வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் எந்த பிரச்சினையையும் சந்திக்காமல் வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் தவறான பாதையில் பயணிக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். முதலில் உங்கள் பாதையை மாற்றுங்கள். சில சமயங்களில் இது பெரிய அளவில் முன்னேற்றத்தை அளிக்கும்.

புதிதாக செய்யும் போது தான் உற்சாகம் அதிகரிக்கும். அரைத்த மாவையே அரைத்து நீங்கள் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணருங்கள்.

உற்சாகம் உங்களுக்குள் தான் இருக்கிறது. அதை வெளியில் தேடாதீர்கள். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத உயிரினங்கள்

| | |
|---|---|
| அதிக நீர் அருந்தும் பறவை | - புறா |
| மிகச்சிறிய முட்டையிடும் பறவை | - தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | - ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபக சக்தி கூடிய விலங்கு | - யானை |
| நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் | -நண்டு , இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | - தேவாங்கு |
| கடல் நீரைப்பருகும் ஒரேயொரு பறவை | -பென்குயின் |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | -ஆல்பட்றாஸ் |
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | -நீர்யானை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | -எலி |
| நாக்கு இல்லாத ஊர்வன | -முதலை |
| கண்களின் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் | - முதலை |
| தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய உயிரினம் | - முதலை |
| நீந்த தெரியாத விலங்கு | -ஒட்டகம் |
| மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப்பெற்ற பறவை | -மரங்கொத்தி |
| எட்டுக் கண்களையுடைய உயிரினம் | -சிலந்தி |

**காலம்**

**நேற்று என்பது நீ செலவழித்து முடித்த பணம்**
**இன்று என்பது உன் கையில் உள்ள பணம்**
**நாளை என்பது உனது கைப்பையிலுள்ள பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பயனுள்ள அறிவு கேள்வி பதில்கள்

01. ஒரு தடவை கூட லோக் சபாவிற்கு செல்லாத இந்திய பிரதமர் யார்?
திரு. சரண்சிங்

02. உலக சுற்றுச்சூழல் தினம் எப்போது கடைப்பிடிக்கப்பட்டது?
ஜூன் 5

03. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு

04. ஒரு ஹெக்டார் என்பது எவ்வளவு ஏக்கர்?
கிட்டத்தட்ட 2.5 ஏக்கர்

05. வேர்க்கடலையின் அறிவியல் பெயர் என்ன?
அராக்கிஸ் ஹைபோஜியா

06. பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் யார்?
விஸ்ணு சர்மா

07. வருடத்தின் ஒரே நாளில் 24 மணிநேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணிநேரம் மட்டும் வருவது எந்த நாளில்?
மார்ச் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?
22

09. ஈக்களில் சுவை உணர் உறுப்பு எது?
நாக்கு

10. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது?
மோகனாங்கி

11. பாலில் உள்ளதை விட அதிக கல்சியம் உள்ள காய்கறி எது?
வெங்காயம்

12. கவிஞர் கண்ணதாசன் பாடல் எழுதிய கடைசி படம் எது?
மூன்றாம் பிறை

13. தமிழில் முதல் நாவலை எழுதியவர் யார்?
தமிழில் முதல் நாவல் எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அவர் 1879ல் எழுதிய " பிரதாப முதலியார் சரித்திரம்" தான் தமிழில் முதல் உரைநடை வடிவ நாவல்.

14. இந்திய நேரம் எந்த இடத்தினை அடிப்படையாய் வைத்து கணிக்கப்படுகிறது?
அலகாபாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொன் மொழிகள்

♣ "காலத்தில் செய்வதைத் தள்ளிப்போட வேண்டாம். தாமதத்தால் தீய முடிவுகள் ஏற்படும்"

-ஷேக்ஸ்பியர்

♣ "கட்டாயப்படுத்தி புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது"

- பிளேட்டோ

♣ "அன்புள்ள இடத்தில் தான் ஆண்டவன் இருக்கிறான்"

- காந்தியடிகள்

♣ " நம்மை நாம் அறியாததன் காரணமாகவே நமக்கு ஆசையும் பயமும் உண்டாகின்றன"

-சுவாமி ராமகிருஷ்ணானந்தர்

♣ "நீரை சல்லடையில் கூட அள்ளிவிடலாம் அது பனிகட்டியாகும் வரை பொறுத்திருக்க வேண்டும்"

- யாரோ

♣ "அவசரம், ஆளை மட்டுமல்ல, அலுவலையும் கெடுக்கிறது."

- ஓர் அனுபவசாலி

♣ "நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகின்றோம்" - காந்திஜி

♣ "ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது"

- ஷாம்பர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ " நம்பிக்கை உள்ளவர்கள் எந்த சூழலையும் சாதகமாக்கிக் கொண்டு முன்னேறுகிறார்கள்"

♣ "கோபம் என்னும் அமிலம் எறியப்படும் இடத்தைவிட அதை வைத்துக்கொண்டிருக்கும் கலதத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்" – கிளெண்டல்

♣ "இடர்களைக்கண்டு அஞ்சாமல் இருப்பதே விரைவான முன்னேற்றத்திற்கான வழியாகும்"

– அரவிந்தர்

♣ "உண்மையிடம் அடைக்கலம் தேடியவன் பலத்தோடும் சுகத்தோடும் இருக்கிறான்"

– ஜேம்ஸ் ஆலன்

♣ "நீ பேசும் வார்த்தை மீது உனக்குள் கட்டுப்பாடு இருக்க வேண்டும்"

– அரவிந்தர்

♣ "நியாயம், நேர்மை உங்கள் செயற்பாடுகளில் வெளிப்பட மரணத்தின் நினைவோடு வாழ்ந்து வாருங்கள்"

– லத்தீன்

♣ கல்வியின் பயன் எதையும் கோபப்பாடாமலும், தன் நம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறன்

– ரபாட் பிராஸ்ட்

♣ "என்றாவது நான் ஆசிரியரானால் , அது கல்வி போதிக்க மட்டுமல்ல, கல்வி கற்பதற்காகவும் இருக்கும்"

– டொரோதி தெலூஸி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ "நாம் எப்போதுமே வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வாழ்வதில்லை"
- எமர்சன்

♣ "மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக்கோட்டையாக வைத்திருக்க கற்க வேண்டும்"

♣ "நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது"
- ஜான்ஸன்

♣ "ஒரு நல்ல நூல் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும்" - வில்லியம் ஹாஸ்விட்

♣ "உன்னைத் தவிர வேறு யாரும் உனக்கு அமைதியைத் தரமுடியாது"
- எமர்சன்

♣ "அசுத்தங்களுள் மோசமான அசுத்தம் கோபம் தான்"
- யாரோ

♣ "துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்"
- ஹென்றி லீவ்ஸ்

♣ 'நல்ல சொற்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. நல்ல செயல்கள் நம்மை மௌனமாக்கின்றன"
- பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| அகத்தியம் | - அகத்தியர் |
| அபிராமி அந்தாதி | - அபிராமிப்பட்டர் |
| திருப்புகழ் | - அருணகிரிநாதர் |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| தக்கயாகப்பரணி | - ஒட்டக்கூத்தர் |
| திருமுருகாற்றுப்படை | - அப்துல் மஜீதுப்புலவர் |
| குறிஞ்சிப்பாட்டு | - கபிலர் |
| இறையனார் காவியம் | - இறையனார் |
| நளவெண்பா | - புகழேந்திப் புலவர். |
| ஆத்திசூடி | - ஔவையார் |
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| இராமாயணம் | - வான்மீகி |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| கந்தபுராணம் | - கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடற் புராணம் | - பரஞ்சோதி முனிவர் |
| செகராஜசேகரம் | -அரசகேசரி |
| தொல்காப்பியம் | -தொல்காப்பியர் |
| அர்த்த சாஸ்திரம் | - கௌடில்யர் |
| சரசோதிமாலை | - போசராச பண்டிதர் |
| மகாவம்சம் | - மகாநாம தேரோ |
| யேசு காவியம் | - கண்ணதாசன் |
| சீவகசிந்தாமணி | -திருத்தக்கதேவர் |
| மணிமேகலை | - சீத்தலைச்சாத்தனார் |
| ஆசியஜோதி | - எட்வின் ஆனெல்ட் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருவாசகம் | - திருவாதவூர் |
| கலிங்கத்துப்பரணி | - சயங்கொண்டார் |
| நைடதம் | - அதிவீரராம பாண்டியர் |
| சிவஞானபோதம் | - மெய்கண்டதேவர் |
| சாகுந்தலம் | - காளிதாசர் |
| மனோன்மணியம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| பகவத்கீதை | - வேதவியாசர் |
| மகாபாரதம் | - வேதவியாசகர் |
| பாஞ்சாலி சபதம் | - பாரதியார் |
| சத்தியசோதனை | - மகாத்மாகாந்தி |
| நற்சிந்தனை | - யோகர் சுவாமிகள் |
| கொன்றைவேந்தன் | - ஔவையார் |
| கீதாஞ்சலி | - ரவீந்திரநாத் தாகூர் |
| ரகுவம்சம் | - காளிதாசர் |
| அரிச்சந்திர புராணம் | - வீரகவிராயர் |
| தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| அத்யாத்தராமாயணம் | - விஸ்வாமித்திரர் |
| திருமந்திரம் | - திருமூலர் |
| யோகசூத்திரம் | - பதஞ்சலி முனிவர் |
| குற்றாலக்குறவஞ்சி | - திருக்கூடராசப்பக் கவிராயர் |
| நன்னூல் | - பவனந்தி முனிவர் |
| வேதியர் ஒழுக்கம் | - வீரமாமுனிவர் |
| நாட்டியசாஸ்திரம் | - பரதமுனிவர் |
| இலக்கியவழி | - சி.கணபதிப்பிள்ளை |
| கீதாரகசியம் | - பாலகங்காதர திலகர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய அறிவுக் குறிப்புக்கள்

| | |
|---|---|
| அறம் இரண்டு | - இல்லறம், துறவறம் |
| இருமை | - இம்மை, மறுமை |
| கலை இரண்டு | - சூரியகலை , சந்திரகலை |
| குணம் மூன்று | - சாத்வீகம் , இராஜசம், தாமதம் |
| சக்தி மூன்று | - இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி |
| மலம் மூன்று | - ஆணவம், கன்மம், மாயை |
| பொருள் மூன்று | - பதி, பசு, பாசம் |
| ஆச்சிரமம் நான்கு | - பிரமச்சாரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் |
| பொருள் நான்கு | - அறம், பொருள், இன்பம் , வீடு |
| பஞ்சாங்கம் | - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் |
| அவத்தை ஐந்து | - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, தூரியம்,துரியா, நீதம் |
| ஐசுவரியம் | - தனம், தானியம், நிதி, பசு, புத்திரர் வாகனம், சத்தம், தைரியம், |
| ஆச்சிரமம் நான்கு | - பிரமச்சாரியம், இல்லறம் வானப்பிரஸ்தம், சந்நியாசம் |
| பொருள் நான்கு | - அறம், பொருள், இன்பம், வீடு |

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| கோபத்திலும் | - | பொறுமை |
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி அடித்தவர்கள்

1. உதயநிலா விளையாட்டுக் கழகம்
   - உதயநகர் மேற்கு.

2. தவம் குடும்பத்தினர்
   - கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி.

3. தர்மகர்த்தாவும் பரிபாலனசபையும்
   - சிவன்கோயில் எழுதுமட்டுவாள்

4. S.சுஜாந், S. மயூரன் , S. திலகரன் நண்பர்கள்
   - France

5. உரிமையாளர் பணியாளர்கள்
   - பார்த்தீபன் ஆட்ஸ், கிளிநொச்சி

6. KMC கிளிநொச்சி

7. 2014 கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
   கிளி / கிளிநொச்சி மத்திய கல்லூரி

8. பாரதிபுரம் அம்மன் கோயில் சங்கர்

9. பெரியண்ணா (சுகு) - வவுனியா

10. கிளிநொச்சி வர்த்தகர் சங்கம் - கிளிநொச்சி

11. P. கறுப்பையா குடும்பம்
    - வசந்தநகர், திருமுறிகண்டி

12. தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
    ஆலய பரிபாலன சபையினர்

13. மயூரன் - செந்தாமரை உணவகம்

14. பிரான்சிஸ் - இயக்கச்சி

15. தவஅரசன் குடும்பத்தினர்
16. கிராம அபிவிருத்திச் சங்கம் - உதயநகர் மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பொதாதைகள்

1. த. ரமணன் துணை வெளிக்களமுகாமையாளர்
   *HNB Assurance Plc*

2. நண்பர்கள்
   *S.* சுஜாந்
   *S.* மயூரன் - *France*
   *K.* திலகரன் - *France*

3. உரிமையாளர் பணியாளர்கள்
   - பார்த்தீபன் ஆட்ஸ், கிளிநொச்சி

4. அண்றூா குடும்பத்தினர் - வவுனியா

5. நிலா அன் நிலன் ஸ்ரோர்ஸ்

6. திருமுறிகண்டி வர்த்தகர்கள்

7. யூனியன் அசூரன்ஸ்

8. தோணிக்கல் ஸ்ரீநாகபூசனி அம்மன்.


# மலர் வினையம்

1. சுபா - காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுத் தொடர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எம் இனிய
குடும்ப குலவிளக்கு
அமரர் செல்வராசா கோணேஸ்
அவர்களின் திடீர் மறைவை
கேள்வியுற்று உடனிருந்தவர்களுக்கும்
சென்று உடனடியாக கொழும்பு
வைத்தியசாலையில்
பார்வையிட்டவர்களுக்கும் மற்றும்
அவரினை வீடுவரை கொண்டு வந்து
சேர்க்க உதவியவர்களுக்கும் இவரின்
மறைவைக் கேட்டு உடன்வந்து
ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்,
நண்பர்கள், அயலவர்கள் மற்றும்
தொலைபேசி மூலம் ஆறுதல்
கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி
வெளியிட்டவர்களுக்கும்,
பதாதைகள் வெளியிட்டவர்களுக்கும்
மற்றும் ஏனைய வழிகளில் உதவி
புரிந்தவர்களுக்கும் இவரது ஆத்ம
சாந்திப் பிரார்த்தனையில் கலந்து
கொண்டவர்களுக்கும் மற்றும் இந்த
நினைவு மலரினை சிறப்பாக அச்சிட்டு
உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும்
மனமார்ந்த நன்றியைத்
தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அப்பா

ஐம்பொறிகள்
துணை கொண்டு
ஆலமரம் போல்
நிழல் தந்த
தந்தையே

ஆணிவேர்
வெட்டுண்ட போதும்
துண்டாகாது
தூரிகை பிடித்து
எம்மை
வளர்த்த தந்தையே
ஒரு நாளிகையில்
எமை மறந்து
விண்ணுலகம்
பறந்தது ஏன்?

## அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

- கவிஞர் கண்ணதாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழம் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579